பணம் கட்டிய பின்பும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை என்பதன்மீது அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது 6 மாத காலம், 1 ஆண்டு காலமாக இல்லை, பத்தாண்டு காலமாக இந்தப் பிரச்சினை இருக்கிறது. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்பதற்காகத்தான் இப்பொழுது அதற்கான ஒரு குழுவை அமைத்திருக்கிறோம். எனவே, அதனை முழுமையாகத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.*

(அஔ) திருமங்கலம் தொகுதி, புதிய பேருந்து நிலையம் மற்றும் இரயில்வே மேம்பாலம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான நில ஒப்படைப்புக்கு அரசாணை வெளியிடப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். தற்போது அது இரத்து செய்யப்பட்டுள்ளதாக அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தற்போது இதனையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

அதேபோல், இரயில்வே மேம்பாலத்திற்கான நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அரசாணை வெளியிட்டார்கள். அதுவும் தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.